# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே








ஞாயிற்றுக்கிழமை 28.02.2021 supeedsam.com supeedsam@gmail.com


# கிழக்கு மாகாண மக்களுக்காக என்றும் களத்தில் நின்று வேலை செய்வேன்

## மதிக்குமார் பௌண்டேசன் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் குணரட்ணம் மதிக்குமார்



( பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாண மக்களுக்காக என்றும் களத்தில் நின்று வேலை செய்வேன் என மதிக்குமார் பௌண்டேசன் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் குணரட்ணம் மதிக்குமார் தெரிவித்தார்.

மதிக்குமார் பௌண்டேசனை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவு மண்ணுக்கு அறிமுகம் செய்கின்ற வைபவம் நேற்று முன்தினம் அம்பாறை ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆளுமை, அதிகாரங்களை விட தென்னிலங்கையில் இருந்து வந்துள்ள

# மண் மாபியாக்களே ஆதிக்க அதிகாரங்களை கொண்டுள்ளார்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் கட்சி சார்ந்த அல்லது, ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆளுமை, அதிகாரங்களை விட தென்னிலங்கையில் இருந்து வந்துள்ள மண் மாபியாக்களே ஆதிக்க அதிகாரங்களை கொண்டுள்ளார்கள் என தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் கவலை வெளியிட்டுள்ளார்.

இது விடயமாக அலர் மேலும் கருத்து தெரிவிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கு மாகாணத்தில் மேலும் இரு கொவிட் மரணங்கள்

## மொத்தம் எண்ணிக்கை 21

கிழக்கு மாகாணத்தில் மேலும் இரு கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளது. அட்டாளச்சேனைசுகாதாரப்பிரிவிலும் ஒருவரும், ஏறாவூரில் ஒருவரும் என இருவர் மரணித்துள்ளனர். குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் கிழக்கில் கொவிட் தொற்றினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது.

கல்முனை பிராந்தியத்தில்11பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில்07பேரும், அம்பாறையில் 02பேரும் ,திருகோணமலையில் 01 என கிழக்கில் மொத்தம்21 மரணங்கள் பதிவாகியுள்ளன.

# கடந்த அரசாங்கம் மக்களை கடனாளியாக்கியது

## ஆதங்கம் வெளியிட்டார் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்



ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சமான நோக்கு எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஸ அவர்களது வழிகாட்டலில் உங்களுக்கு வீடு நாட்டிற்கு எதிர்காலம் எனும் திட்டத்திற்கு அமைவாக கடந்த 2020 ஆம் ஆண்டு

02 ஆம் பக்கத்தில்...

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் உட்பட மூன்று பேர் கைது



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு பிரதேசங்களில் பாரியளவில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் உட்பட மூன்று பேர் ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிமிருந்து கேரள கஞ்சா

02 ஆம் பக்கத்தில்...

# 30 வருடங்களாக மூடப்பட்டு காடுமண்டிக் கிடக்கும் ஏறாவூர் புதிய சந்தையை மீளத் திறக்கும் நடவடிக்கை



(ரக்ஸனா)

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டு காடுமண்டிக் கிடக்கும் ஏறாவூர் நகர சபைக்குச் சொந்தமானதும் மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலையருகே அமைந்துள்ளதுமான

02 ஆம் பக்கத்தில்...

# புலிகளின் புலனாய்வு பிரிவுடன் செயற்பட்ட ஜஸ் மஞ்சூவின்

## கைத்துப்பாக்கியுடன் அவரது தம்பி கைது



( ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை நகரில் தலைமையகப் பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட கடந்த 10.02.2021

02 ஆம் பக்கத்தில்...

# சட்டவிரோத மீன்பிடி முறைமைகளை தடுக்க ஒன்றிணையவுள்ள வடக்கு மீனவ அமைப்புக்கள்



( சண்முகம் தவசீலன்)

சட்டவிரோத மீன்பிடி முறைமைகளை தடுக்க வடக்கு மாகாணத்தின் நான்கு மாவட்டங்களின் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் முல்லைத்தீவு மீனவ பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாண மீனவ பிரதிநிதிகளுக்கும் இடையில்

02 ஆம் பக்கத்தில்...






# ஆளுநர் நிறைவேற்று அதிகாரியாக இருக்கக் கூடிய மாகாண சபையை முறைமை மாற்றப்பட வேண்டும்

## தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வ.கமலதாஸ்



தற்போதுள்ள அரைசியலமைப்பின்படி முதலமைச்சர் என்பவர் தீர்மானங்களை முன்மொழிபவராகவும், அதனை நிறைவேற்றுகின்ற அதிகாரம் கொண்டவராக ஆளுநரே இருக்கின்றனர்.

இந்த முறைமை மாற்றப்பட வேண்டும். முதலமைச்சரே நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும்.

மத்திய அரசினால் நியமிக்கப்படுகின்ற, மத்திய அரசிற்கு ஆமாம்

02 ஆம் பக்கத்தில்...

# யாழ்ப்பாண தீவுகளை வேறு நாடுகளுக்கு வழங்குவதினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## மீனவ பிரதிநிதிகள்

( சண்முகம் தவசீலன்)

யாழ்ப்பாண தீவுகளை வேறு நாடுகளுக்கு வழங்குவதினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் முல்லைத்தீவு மீனவ பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாண மீனவ பிரதிநிதிகளுக்கும் இடையில்

02 ஆம் பக்கத்தில்...

முல்லைத்தீவு மாவட்ட







# மக்களின் தேவைகள் துரிதமாக நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்

## துறைநீலாவணையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தெரிவிப்பு

(ரக்ஸனா)

மக்களின் தேவைகள் துரிதமாக நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் துறைநீலாவணையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தெரிவிப்பு.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் அறிவுரைக்கு அமைவாக அக்கட்சியின் முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்ட மக்கள் சந்திப்பு சனிக்கிழமை(27) மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணைக் கிராமத்தில் நடைபெற்றது.

அக்கட்சியின் துறைநீலாவணை அமைப்பாளர் பிரகாஷ் சர்மா தலைமையில் உச்சிமா காளியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தமிழ் மக்கள் கட்சியின் பிரதிச் செயலாளர் மற்றும் ஜெயராஜ் மற்றும் பிரதி அதிபர் எஸ்.சசிதரன், கட்சியின் உறுப்பினர்கள், பொது அமைப்பின் பிரதி நிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கட்சியின் பிரதிச் செயலாளர் மக்களின் தேவைகளை கேட்டறிந்ததுடன் துரிதமாக தேவைகள் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என மக்கள் மத்தியில் உறுதியளித்தார்.

## யாழ்ப்பாண தீவுகளை வேறு நாடுகளுக்கு வழங்குவதினை ஒருபோதும்...

கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் இன்று காலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர் .

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட மீனவ சம்மேளன பிரதிநிதியான வர்ணகுலசிங்கம் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்;

யாழ் மாவட்டத்திலுள்ள தீவகங்களில் 3 தீவுகளை வெளிநாடுகளுக்கு மின்சார வசதிகள் செய்வதற்காக வழங்குவது தொடர்பாக அறியக் கிடைக்கிறது அது எந்த நிறுவனமாக இருந்தாலும் சீனாவாக இருந்தாலும் சரி இந்தியாவாக இருந்தாலும் சரி அவர்களுக்கு வழங்குவதை யாழ் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகளாக நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது ஏனெனில் சீனாவாக இருந்தாலும் சரி இந்தியாவாக இருந்தாலும் சரி அங்கே வந்து ஆதிக்கத்தை செலுத்துவார்கள் எங்களுடைய மீனவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்படுவார்கள்.

இப்போதே இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை காரணமாக அவர்கள் வந்து இங்கு சண்டித்தனம் விட்டு தொழில் செய்கின்ற நிலைமைகள் காணப்படுகின்றது எனவே அவர்கள் இந்த தீவுகளில் குடிகொண்டால் அது இன்னும் பாதகமாகவே அமையும் எனவே இந்த தீவகங்களை ஒருபோதும் வெளிநாடுகளுக்கு வழங்கும் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என தெரிவித்தார்

இது தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட மீனவ சமூக பிரதிநிதியான அ.அன்னராசா அவர்கள் யாழ் மாவட்டத்தின் தீவகங்களை சீன நிறுவனத்திடத்தில் மின் உற்பத்திக்காக வழங்குகின்ற செயல்ப்பாட்டை தாங்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தெரிவித்தார். எனவே இலங்கையினுடைய ஜனாதிபதி அவர்களும் பிரதமர் அவர்களும் எங்களுடைய பிரதேசத்திலே நாங்கள் சுதந்திரமாக தொழிலை செய்து நிம்மதியாக வாழக்கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி வேறு நாடுகளுக்கு தீவுகளை வழங்குகின்ற செயல்பாட்டை தடுத்து நிறுத்தி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## ஆளுநர் நிறைவேற்று அதிகாரியாக இருக்கக் கூடிய மாகாண சபையை...

போடுகின்ற ஆளுநர் அதிகாரத்தை நாங்கள் விரும்பவில்லை என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வ.கமலதாஸ் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைத் தேர்தல் குறித்து சமகால அரசியல் நிலைமையுடன் தொடர்பு படுத்தி இன்றைய தினம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசிலமைப்பு என்பது நாங்கள் இழந்துவிடக் கூடாத ஒரு சந்தர்ப்பமாகும். ஏனெனில் குடியரசு அதிகரமுள்ள நாடு என்ற ரீதியில் ஒவ்வொரு வாக்காளர்களும் தங்கள் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ளவர்கள். அதற்கான கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது. பிரிஸ்டிஸ் காலணித்துவத்தின் சிபாரிசுகளோ, இதுவரை காலமும் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களோ இனிமேல் செல்லுபடியாகாது.

புதிய அரசியலமைப்பு எழுதப்படும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சிங்கள பௌத்த அபிலாசைகளை முன்நிறுத்தியதாக பொதுஜன பெரமுன தங்கள் அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதேநேரம் இந்தியாவினுடைய ஏற்பாட்டில் இலங்கை அரசு சம்மதித்த இலங்கையின் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரம் அளிக்கின்ற, அரசியற் பகிர்வளிக்கின்ற 13வது திருத்தச்சட்டத்திற்கு வலுச்சேர்ப்பதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தாலும், எந்த அரசும் இதுவரை அந்த வாய்ப்புகளை வழங்கவில்லை. அதனவகையில் அவற்றை நிராகரிக்காத வண்ணம் அவற்றையும் உள்வாங்கியவாறு ஒரு பல்லினத்துவம் மிக்கதும், அதே நேரம் தத்தமது தாயகப் பரப்புகளில் சிறுபான்மை மக்கள் தங்கள் அதிகாரத்தை, தனித்துவத்தைப் பேணக் கூடியவாறானதுமான பரிந்துரைகளை முன்வைத்து வருகின்றோம்.மாகாண சபைத் தேர்தல் ஒரு அராஜகமான போக்கில் இன்றுவரை நடாத்தப்படாமல் பிற்போடப்பட்டு வருகின்றது என்றார்.

## சட்டவிரோத மீன்பிடி முறைமைகளை ....

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் நேற்று காலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து ஆராயப்பட்டு குறித்த சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்ததாகவும் எனவே நான்கு மாவட்ட மீனவ அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து ஒட்டுமொத்தமாக சட்டவிரோத மீன்பிடி முறைகளை தடுக்கும் முகமாக ஒரு நிலைப்பாட்டுக்கு வரும் முகமாக குறித்த சந்திப்பு இடம்பெற்றது

முல்லைத்தீவை தொடர்ந்து கிளிநொச்சி மன்னார் மாவட்ட மீன்பிடி அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி எதிர்காலத்தில் ஒற்றுமையாக ஒரு நிலைப்பாடாக அனைத்து மாவட்டங்களிலும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காக செயற்பட போவதாக மீனவ அமைப்பின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

## 30 வருடங்களாக மூடப்பட்டு காடுமண்டிக்...

புதிய சந்தையை மீளத் திறக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.ஆர். சியாஹநில் ஹக் தெரிவித்தார்.

அந்தச் சந்தையின் வியாபார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்தையில் வியாபாரம் செய்வதற்கான குத்தகை உரிமையினைப் பெற்றிருந்தவர்கள் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து இந்தச் சந்தையில் வியாபாரம் செய்ய விரும்பினால் உரிய ஆவணங்களுடன் வர்த்தமானப் பத்திரிகையின் அறிவித்தலுக்கமைவாக எதிர்வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் நகர சபைச் செயலாளரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே சந்தை வியாபாரிகள் இச்சந்தையில் ஏற்கெனவே தாங்கள் வியாபாரம் செய்ததை குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் உரிய ஆவணங்களுடன் உறுதிப்படுத்தத் தவறும்பட்சத்தில் அந்த சந்தையின் குத்தகை உரிமையினை இழந்தவராகக் கருதப்படுவதோடு குத்தகை உரிமம் தொடர்பான இழப்பிற்கு நகர சபை எவ்விதத்திலும் பொறுப்பாகாது எனவும் நகர சபைச் செயலாளர் தெரிவித்தார்.

ஏறாவூர் புதிய சந்தை எனப்படும் இச்சந்தையில் 1990ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் மூவின மக்களும் இங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாத இன வன்முறைகளைத் தொடர்ந்து சந்தை நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்ததோடு ஏறாவூர் நகர சபை அலுவலகமும் முற்றாக சேதப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டு விட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மட்டு ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின்...

யார்என்ன விமர்சனத்தை வெளியிட்டாலும் நிதர்சனமையை உண்மை இதுதான். அதிகாரிகளை இடம் மாற்றவும், அதிகாரிகளுக்கு அமைச்சர்களிடம் இருந்து கட்டளை பெற்றுகொடுக்கும் சிறப்பு அதிகாரங்களுடன் இந்த தென்னிலங்கை மண் மாபியாக்கள் எமது மாவட்டத்தில் செயற்படுகிறார்கள் நமது மாவட்ட ஆளும் கட்சி சார்பான அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் மிகவும் அக்கறை குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண மக்களுக்காக என்றும் களத்தில்...

இதில் சிறப்பம்சமாக காரைதீவையும் அண்டிய பிரதேசங்களையும் சேர்ந்த சமூக சேவைகள்ஆர்வலர்கள் மதிக்குமார் பௌண்டேசன் அமைப்பில் சம்பிரதாயபூர்வமாக அங்கத்துவம் பெற்று கொண்டனர். இதே போல 30 பயனாளி மாணவர்களுக்கு புத்தக பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவின் மூத்த அரசியல்வாதியும், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான பி. ரி. தர்மலிங்கம் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் அரசியல் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான எம். சி. ஆதம்பாவா, நாட்டை காக்கும் இளைஞர் அணியின் கிழக்கு மாகாண உப தலைவர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாம் ஆகியோரும் பிரமுகர்களாக கலந்து கொண்டனர்.

இங்கு குணரட்ணம் மதிக்குமார் தொடர்ந்து உரையாற்றுகையில்மக்கள் சேவையே மகேசன் சேவை ஆகும், ஏழையின் கண்ணீரில் இறைவனை காணுங்கள் என்று பெரியவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.எமது மக்களுக்கு இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் என்னால் முடிந்த சேவைகளை செய்து கொடுப்பதில் பெருமகிழ்ச்சியும், ஆன்ம திருப்தியும் அடைகின்றேன் என்றார்.

தலைவர் தர்மலிங்கம் இங்கு தலைமை உரையாற்றியபோது மதிக்குமார் போன்ற இளைஞர்கள் எமது மக்களுக்கு கிடைத்து உள்ள வரம் ஆகும், சுவாமி விவேகானந்தர், அன்னை தெரேஸா போன்ற பெரியார்கள் ஏழைகளுக்கும், ஏதிலிகளுக்கும் செய்கின்ற உதவிகள் இறைவனுக்கு செய்கின்ற உபகாரங்களுக்கு சமமானவை என்று சொல்லி உள்ளார்கள், தம்பி மதிக்குமார் போன்றவர்களின் வழிகாட்டல் எமது சமூகத்துக்கு எப்போதுமே தேவை என்றார்.

சட்டத்தரணி ஆதம்பாவா பேசியபோது பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்ற விதம் மகிழ்ச்சி தருகின்றது, ஏதேனும் ஒரு வகையில் குறைபாடுகள் அல்லது தேவைகள் இருக்க கூடியவர்களே பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு உள்ளனர், மதிக்குமாரின் சேவைகளை நாம் மனமார பாராட்டி வாழ்த்துவதோடு பயனாளி மாணவர்கள் வாழ்க்கையில் இறை நம்பிக்கை, நேரமுகாமைத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றை கைக்கொண்டு வாழ வேண்டும், இதன் மூலமாக வாழ்வில் நிச்சயம் உயர முடியும் என்றார்.

## புலிகளின் புலனாய்வு பிரிவுடன் செயற்பட்ட ஐஸ் மஞ்சுவின்...

அன்று என்.சீ. வீதியில் மாலை 6.30 மணியளவில் நகைகடையில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பெயரில் ஆறு நபர்களை கைதுசெய்ததாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புல்மோட்டை பிரதேசத்தில் மூவரும் ,மொரவெவ பிரதேசத்தில் ஒருவரும்,சமுத்திராகம பிரதேசத்தில் ஒருவரும்,சீனன்குடா பிரதேசத்தில் ஒருவருமாக ஆறு நபர்களை கைது செய்ததாக தலைமையகப்பொலிஸார் தெரிவித்தனர். நகை கடையில் கொள்ளை போன 35 பவுன் நகைகளில் 17 பவுன் நகைகள் கொள்ளையர்களால் புத்தளம் மாவட்டம் கற்பிட்டி,மாரவில பிரதேசங்களில் விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் நகைகள் மீட்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் கொள்ளையில் பிரதான சந்தேகநபரும் கொள்ளை கூட்டத்தின் தலைவராக செயற்பட்ட 34 வயதுடையவரிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கியும் ஆறு தோட்டாக்களுடனான மெகசீனும் ஒரு கைகுண்டும் ஒரு வாளும் கைப்பற்றபட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். பிரதான சந்தேக நபர் 2005.10.30 திகதி இராணுவ புலனாய்வு பொறுப்பாளர் கேணல் ரிஸ்வி மீடினை கொழும்பில் வைத்து சுட்டு கொலைசெய்த ஐஸ் மஞ்சு என்பவரின் சகோதரர் ஆவார்.

ஐஸ் மஞ்சுவே தன்னிடம் கைத்துப்பாக்கியை 2008 ஆம் ஆண்டு வழங்கியதாகவும் அந்த கைத்துப்பாக்கியையே தாம் கொள்ளையின் போது பாவித்ததை ஒப்புக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவான ஐஸ் மஞ்சு தற்போதும் தமது சகோதரருடன் தொடர்புகளை பேணிவருவதாக சந்தேகம் தெரிவித்த பொலிஸார் கேணல் மீடினை சுட பயன்படுத்திய கைத்துப்பாக்கி தற்போது கைப்பற்றப்பட்டதாக கைத்துப்பாக்கியாக இருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைகளை துரிதப்படுத்தியதுடன் கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட ஆயுதம் மற்றும் நகைகளை நாளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவதாக தலைமையகப்பொலிஸார் தெரிவித்தனர்

## போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் உட்பட மூன்று...

மற்றும் ஹெரொயின் ஆகிய போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.டபிளியு.கே. ஜயந்த தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இச்சம்பவங்கள் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது...

கிரான் பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் வீடு ஒன்றில் தேடுதல் செய்தபோது அவ்வீட்டிருந்த தும்புத்தடியில் நுட்பமான முறையில் மறைக்கப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதேவேளை ஓட்டமாவடி பிரதேசங்களைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவியுடன் பயணம் செய்த கார் ஒன்றை செங்கலடி பிரதேசத்தில் பொலிஸார் சோதனையிட்டபோது அந்தக் காரிலிருந்து ஹெரொயின் கைப்பற்றப்பட்டது.

வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் காரில் குருநாகலிலிருந்து பெருந்தொகை ஹெரொயின் போதைப்பொருள் கொண்டுவரப்பட்டுள்ளது. அப்போதைப் பொருட்பொதி ஏறாவூரைச் சேர்ந்த வியாபாரியொருவர் மூலமாக சம்மாந்துறைப் பிரதேச்திற்கு அனுப்பப்பட்டது. அதன்பின்னர் அந்த நபர் தனது மனைவியுடன் சிறிய தொகை ஹெரொயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டு ஓட்டமாவடி நோக்கிப் பயணம் செய்தபோது பொலிஸார் காரை வழிமறித்துச் சோதனை செய்துள்ளனர். அதிலிருந்து ஹெரொயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

## கடந்த அரசாங்கம் மக்களை கடனாளியாக்கியது...

ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கும் ஒரு வீடு என்ற அடிப்படையில் நாடு பூராகவும் 16 ஆயிரம் கிராம உத்தியேகத்தர்கள் பிரிவுகளில் வீடுகளை நிர்மானிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மேலும் 43 வீட்டுரிமையாளர்களுக்கான முதற்கட்ட நிதி வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று கல்லடியில் அமைந்துள்ள மட்டக்களப்பு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் மாவட்ட காரியாலயத்தில் மாவட்ட முகாமையாளர் கே.ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கலந்துகொண்ட நிகழ்விற்கு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனது மக்கள் தொடர்பாடல் அதிகாரி த.ஈஸ்வரராஜா உள்ளிட்ட முற்போக்கு தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது 43 பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் நாற்பத்தி மூவாயிரம் இலட்சம் வழங்கி வைக்கப்பட்டது.

அரசாங்கம் இப்பொழுது வீடமைப்பு சம்பந்தமாக மக்களை கடனாளியாக்காமல் அவர்களுக்குரிய சொந்த வாழ்விடத்தில் வீடை கட்டிக் கொடுக்க வேண்டும் எனும் விடையத்தில் நாட்டினுடைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஸ அவர்களும் மிகவும் கவனமாக இருக்கின்றார்கள், அதே போன்று வீடமைப்புத் துறைக்கு பொறுப்பாக இருக்கின்ற இராஜாங்க அமைச்சர் இந்திக்க அவர்களிடமும் நாங்கள் பல தடவைகளாக பேசிக்கொண்டு இருக்கின்றோம், பல வீட்டுத் திட்டங்களை நாங்கள் கோரியிருக்கின்றோம். நாங்கள் முன்வைக்கும் எந்தக் கோரிக்கைக்கும் எந்த விதமான மறுப்பும் தெரிவிக்காமல் உண்மையில் வட கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு பெருமளவான வீட்டுத் திட்டங்களிற்கான தேவைப்பாடு இருக்கின்றது. இப்பொழுது அரசாங்கம் அவற்றிற்கான தீர்வை மிகவும் வேகமாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு கடந்த அரசாங்க காலத்தில் 12,8000 ஆயிரம் பெறுமதியான, சுமார் 65 ஆயிரம் வீடுகள் வரவிருந்தது அதில் 6 வீடுகளைக் கூட கடந்த அரசாங்கம் கட்டி முடிக்கவில்லை. ஆனால் அந்த வீட்டுத்திட்டத்திலே நாங்கள் மட்டக்களப்பில் 100 வீடுகளை கட்டுவதற்கான அடிக்கற்களை நாங்கள் நாளை அல்லது நாளை மறுதினம் நடுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த ஆட்சி காலத்திலே மக்களுக்கு கிடைக்காமல் தடைப்பட்டிருந்த வீட்டுத் திட்டத்திற்கான வேலைத்திட்டத்தினையும் நாங்கள் இப்போது மிக வேகமாக முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த ஆட்சியில் எல்லோரிடமும் இரண்டரை இலட்சம் ரூபாய் பணத்தினை அவர்களிடம் வாங்கி அவர்களுக்கான வீட்டுத்திட்டத்தினை வழங்கினார்கள், மொத்தத்தில் கடந்த அரசாங்க காலத்தில் மக்களை கடனாளியாக்கினார்கள். ஆனால் தற்போதைய அரசாங்கம் அந்த கடனையும் செலுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. ஆகவே கடந்த அரசாங்க காலத்தில் மக்கள் கடனாளியாக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் தற்போதைய அரசாங்கம் மக்களை கடனில் இருந்து மீட்டுக் கொள்ளும் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றதென இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பயனாளிகளுக்கான காசோலையினை வழங்கி வைத்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மாசி மக திருவிழா





(படுவான் பாலகன்)

வரலாற்று சிறப்புமிகு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மாசி மகம் பூசை வழிபாடுகள் நேற்று(26) ஆரம்பமாகி நேற்று (27) காலை தீர்த்தோஸ்வதுடன் நிறைவு பெற்றது.

விசேட ப்பூசை வழிபாடுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றதுடன், வசந்த மண்டப பூசை வழிபாடுகளை தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வந்த நிகழ்வும் இடம் பெற்றது.

சிவஸ்ரீ.மு.கு.சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் பூசை ஆராதனைகள் நடைபெற்றன. இப்பூசை ஆராதனைக்கான உபயத்தினை கச்சலாக்குடி மக்கள் வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் 100 மில்லியன் செலவில் கடற்றொழில் அபிவிருத்தி; அமைச்சர் தேவானந்தா நம்பிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில்சார் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வற்கு சுமார் 100 மில்லியன் ரூபாய்களை பயன்படுத்த முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு ்ள்ள கடற்றொழில் அமைச்சர், மாவட்டத்தின் பல்வேறு சமூக அமைப்புக்களையும் சந்தித்து மாவட்டத்தின் நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இந்நிலையில், கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் நேற்று (27.02.2021) நடத்திய கலந்துரையாடலிலேயே குறித்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

'கடற்றொழிலாளர்களுக்கு கௌரவமான வாழ்கைத் தரத்தினை ஏற்படுத்துவதற்கு நிறைவான வருமான மார்க்கங்களை அதிகரிக்க வேண்டும்.

குறிப்பாக கடற்றொழில் மற்றும் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீன்பிடிச் செயற்பாடுகளை சட்ட விதி முறைகளுக்கு அமைய ஒழுங்குபடுத்துவதுடன், அதிகளவான வருமானத்தை தரக்கூடிய தொழில் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கடற்றொழில் சமூகத்தினருக்கு சிறந்த வாழ்கை தரத்தினை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கு மக்களுக்கு நிரந்தரமான தரமான பொருளாதார கட்டமைப்பை ஒருவாக்கும் நோக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு புலம்பெயர் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் தொழிலசார் அபிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடியவாறு சுமார் 100 மில்லியன் ரூபாய்களை கொடையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கடந்த காலத்தைப் போன்று இல்லாமல் சரியான தரப்புக்களை இனங்கண்டு செயற்படுவார்களாயின், குறித்த தனியார் பங்களிப்புக்களையும் அதேபோன்று அரசாங்க திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய கடற்றொழில் சார் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்'



என்று தெரிவித்தார்.

அதேவேளை, கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மாவட்டச்செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்தில் காணப்படுப் கரைவலைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அளவிற்கு அதிகமான வெளிமாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை, வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகள், கொக்குளாய் களப்பு பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்துதல், நந்திக்கடல் அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கரைவலைத் தொழிலை மேற்கொள்வதற்கான இடங்களை அடையாளப்படுத்தும் வேலைகளை விரைவில் பூரணப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய கடற்றொழில் அமைச்சர், குறித்த தொழில் தொடர்பான விதிமுறைகளுக்கு அமைய தரவுகளை ஆராய்ந்து உரியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதுடன் மேலதிகமானவற்றை விரும்புகின்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் சம்மந்தப்பட்டவர்களுடன் ஆராய்ந்து இன்னும் இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.












**உதயகுமார் கல்வி நிலையம்**




முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com



நேற்றைய தினம் அக்னிச் சிறகுகள் பேரவை,நாவற்காடு/நாமகள்/ கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர்,ஆசிரியர்கள்,பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையில் சுற்றுவேலி,வளாகத்தினை துப்பரவு செய்வதை இங்கு காணலாம்.

# சைவ இறை இசைப் பாடல்கள் ஒலித்த வட்டுவாகலில் தற்போது பௌத்தமத காப்புரைகள் ஒலிக்கின்றன

## ரவிகரன் சுட்டிக்காட்டு

(ச.தவசீலன்)

சைவ இறை இசைப் பாடல்கள் மட்டுமே ஒலித்த வட்டுவாகல் கிராமத்தில் தற்போது பௌத்த மதக்காப்புரைகள் காலையும் மாலையும் ஆக்கிரமிப்பு உரைகளாக ஒலிக்கவிடப்படுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வட்டுவாகல் கிராமம் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் திணைக்களம் என பல்வேறு அரச இயந்திரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வட்டுவாகல் ஒரு தனித் தமிழ் சைவக் கிராமமாகும். இந்த கிராமத்தில் தற்போது சத்தமில்லாதவகையில் பல வழிகளிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலோங்கிவருகின்றன.

அந்த வகையில் அங்கு கோத்தபாய கடற்படைத் தளம் என்னும் கடற்படைத்



தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வட்டுவாகல் அக்கரையில், வடக்காறுப் பகுதிக்கு எவரும் மீன்பிடிச் செயற்பாட்டிற்குச் செல்ல முடியாதவாறு 670ஏக்கர், 03றூட், 10பேச் காணியினை கடற்படையினர் அபகரித்துள்ளனர்.

இதுதவிர வட்டுவாகல் இக்கரையிலும் வடக்காறுப் பக்கமாக கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தினை அபகரித்து அங்கு இராணுவமுகாம் அமைக்கப்பட்டதோடு மாத்திரமின்றி, பாரிய பௌத்த விகாரையும் அங்கு அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

அத்தோடு நந்திக்கடலும், நந்திக்கடலோடு சேர்ந்த வயல்நிலங்கள், நிலப்பகுதிகளை உள்ளடக்கி வனஜீவராசிகள் திணைக்களம் ஏறத்தாள 10250ஏக்கர், அதாவது 4141.67ஹெக்டயர் நிலத்தினை தங்களுடைய ஆளுகைக்குள் கெண்டுவந்திருக்கின்றார்கள்.

இந்தவகையில் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் திணைக்களம் என அரச இயந்திரங்கள் வட்டுவாகல் பகுதியில் தமது ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

அதேவேளை இப்பகுதி பகுதிமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில், சிங்கள பௌத்த குடும்பங்களே இல்லாத இந்த வட்டுவாகல் கிராமத்தில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையில் பௌத்த மத காப்புரைகள் காலையும் மாலையும் வட்டுவாகல் கிராமம் பூராகவும் ஒலிபெரிக்கியூடாக ஒலிபரப்பப்படுகின்றது. அதாவது பௌத்த மதக் காப்புரைகள் அங்கு ஆக்கிரமிப்பு உரைகளாக அங்கு ஒலிக்கவிடப்படுகின்றன.

ஒரு தனித்தமிழ் சைவக்கிராமத்தில் இப்படியானதொரு பௌத்த மத ஆக்கிரமிப்பு இடம்பெறுவதுடன் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் என்பவற்றாலும் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுவருவதால், வட்டுவாகல் கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் கூனிக் குறுகிப்போய் இருக்கக்கூடிய நிலையே ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் சைவ இறைஇசைப் பாடல்கள் ஒலித்துவந்த வட்டுவாகல் கிராமத்தில் தற்போது பௌத்த மத காப்புரைகள் ஆக்கிரமித்துள்ளன - என்றார்.

# விவசாய பண்ணை திறப்பு விழாவும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கலும்






ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புலப்பெயர் தேசத்தில் வாழும் அவரது உறவுகள் பிள்ளைகளால் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது

(ச.தவசீலன்)



அமரர் திரு ஆபேல் லூக்கஸ் அவர்களுடைய 1 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவருடைய உறவுகளால் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கோடு விவசாய பண்ணை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கோடும் இதன் வருமானமூடாக பாதிக்கப்படட சமூகத்தின் கல்வி வளர்ச்சி உள்ளிட்ட விடயங்களுக்கு உதவும் முகமாகவும் அமரர் திரு ஆபேல் லூக்கஸ் அவர்களுடைய 1



அமரர் திரு ஆபேல் லூக்கஸ் அவர்களுடைய 1 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் குறித்த பண்ணை திறந்து வைக்கப்பட்டதோடு புதுக்குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த 20 வறிய மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வும் மேலும் பல மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது

நிகழ்வில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய முதல்வர் றொபின்சன் ஜோசெப் அடிகளார் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உப தவிசாளர் க.ஜனமேஜெயந்த் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் ஒளித்திலகன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்னாள் நிர்வாக கிராம அலுவலர் சிவதாஸ் மல்லிகைத்தீவு கிராம அலுவலர் சமுர்த்தி அலுவலர் கிராம மடட அமைப்புக்களில் பிரதிநிதிகள் அமரர் திரு ஆபேல் லூக்கஸ் அவர்களுடைய உறவினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# ஆரையூர் அருள் எழுதிய ‘வில்லடிப்பாட்டு’ நூல் வெளியீட்டு நிகழ்வு





(படுவான் பாலகன்)

ஆரையூர் அருள் எழுதிய வில்லடிப்பாட்டு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுசனிக்கிழமை கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் ஆரையூர் அருள் முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.ப.மானகப்போடிக்கு வழங்கி வைத்தார். தொடர்ந்து வெளியீட்டுரையை இ.குகநாதன், நூல் நயவுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் மோகனதாசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நாகசக்தி கலை மன்றத்தின் தலைவர் மு.நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலைஞர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நூலாசிரியர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அல் ஹாபிழ் பட்டம் பெற்று வெளியான தியாவட்டவான் தாறுஸ்ஸலாம் அறபுக்கல்லூரி மாணவன்

(ந.குகதர்சன்)



அண்மையில் அல் குர்ஆன் முழுவதையும் தனது 14 வயதில் மனனம் செய்து அல் ஹாபிழ் பட்டம் பெற்று வெளியான தியாவட்டவான் தாறுஸ்ஸலாம் அறபுக்கல்லூரி மாணவன் ஏ.பி.எம். ஹஸ்மீருக்கு பரிசில்கள் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு தியாவட்டவான் அல் ரஷாத் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் ஹாலீத் பின் வலீத் ஜும்ஆப் பள்ளிவாயலில் இடம்பெற்றது.

இப்பிரதேசத்தில் புதிதாக உருவாக்கம் பெற்ற குறித்த விளையாட்டுக்கழகம் தனது முதற்கட்டப்பணியாக இக்கௌரவிப்பு நிகழ்வினை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக உதயமான இக்கழகத்திற்கு போதுமான விளையாட்டுபகரணங்கள் இல்லாத நிலையிலும்இ பின்தங்கிய கிராமத்திலிருந்து மிக இளவயதில் அல் குர்ஆன் முழுவதையும் மனனமிட்டு ஹாபிழாக பட்டம் பெற்ற குறித்த மாணவனை ஊக்குவிக்கும் வகையில் கௌரவித்தமை பாராட்டுக்குரியது.

குறித்த கழகம் விளையாட்டுடன் மட்டும் நின்று விடாது இவ்வாறான செயற்பாடுகளையும் பிரதேசத்தில் பொதுவான ஏனைய விடயங்களிலும் முன்னின்று செயற்படுவது வரவேற்கத்தக்கது.

விளையாட்டுக்கழகத் தலைவர் எம்.ஐ.வஷான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில்இ ஹாலீத் பின் வலீத் ஜும்ஆப் பள்ளிவாயல் தலைவர் எம்.பௌஸ்தீன் உரையாற்றுகையில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அல் ரஷாத் விளையாட்டுக்கழகத்திற்கும் அதன் தலைவர் எம்.ஐ.வஷான் மற்றும் கழக அங்கத்தவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதோடு கழகத்தின் வளர்ச்சிக்கு தம்மால் முடிந்த அத்தனை உதவிகளையும் செய்து தருவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பள்ளிவாயல் நிருவாகிகள் பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள்இ விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள் மாணவனின் பெற்றோர் உறவினர்கள் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

**குடும்ப பெண் ஒருவருக்கு சிறுநீரகம் தேவை**

மட்டக்களப்பில் இரு சிறுநீரகமம் பாதிக்கப்பட்ட குடும்ப பெண் ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவை எனவே **A+** அல்லது **A , O+** அல்லது **0** சிறுநீரகம் தேவையாகவுள்ளது, எனவே வழங்குபவர்கள் 3050 வயதுக்குட்பட்டோராக இருக்கவேண்டும். வழங்குபவருக்கு சண்மாணம் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள: 0754340584**

# சுபீட்சமான நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 43 வீட்டுரிமையாளர்களுக்கு முதற்கட்ட நிதி வழங்கிவைக்கும் நிகழ்வு





(ரக்ஸனா)

நாட்டை கட்டியெலுப்பும் சுபீட்சமான நோக்கு எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ அவர்களது வழிகாட்டலில் உங்களுக்கு வீடு நாட்டிற்கு எதிர்காலம் எனும் திட்டத்திற்கு அமைவாக கடந்த 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கும் ஒரு வீடு என்ற அடிப்படையில் நாடு பூராகவும் 16 ஆயிரம் கிராம உத்தியேகத்தர்கள் பிரிவுகளில் வீடுகளை நிர்மானிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் 43 வீட்டுரிமையாளர்களுக்கான முதற்கட்ட நிதி வழங்கிவைக்கும் நிகழ்வு சனிக்கிழமை(27) மட்டக்களப்பு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் மாவட்ட முகாமையாளர் கே.ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கலந்துகொண்டிருந்தார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி.பு.சசிகலா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி த.ஈஸ்வரராஜா. முற்போக்கு தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான தையல் நிலையம் திறந்து வைபு






வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சமூகசேவைகள் திணைக்களத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் தொடரச்சியாக இடம் பெற்றுவருகின்றது.

அந்த வகையில் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமூகசேவைகள் திணைக்களத்தினால் மாற்றுத்திறனாளிகளுக்கான இளநிலா தையல் நிலையம் கறுவாக்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

கோறளைப்பற்று வாழ்வின் உதயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எஸ்.சஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமூகசேவை உத்தியோகத்தர் பொ.டிமலேஸ்வரன், சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன், கறுவாக்கேணி கிராமசேவை அதிகாரி அ.பிரபு, கறுவாக்கேணி மாதர் சங்கதலைவி, முன்பள்ளி ஆசிரியர், சமூக நிலைய உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தையல் இயந்திரங்களும் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அதனோடு இணைந்த பொருட்களும் வழங்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தையல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது

வாழ்வின் உதயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினால் மாற்றுத்திறனாளி ஒருவரின் மருத்துவ செலவுக்காக மூப்பதாயிரம் ரூபாவும், சுயதொழில் உதவிக்காக ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் தையல் பயிற்சியினை மேற்கொண்ட பெண்களுக்கு தையல் இந் நிலயத்தின் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி வருமானத்தினை அதிகரித்து சொந்தகாலில் நிற்க கூடிய வகையில் வேலைத்திட்டம் இடம் பெற்றதாக சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.





# பாட்டாளிபுரம் இளைஞர் வள நிலையத்தில் 26 ஆவது பௌர்ணமி நிகழ்வு

(பொன்ஆனந்தம்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாட்டாளிபுரம் இளைஞர் வளநிலயத்தில் 26 ஆவது பௌர்ணமி நிகழ்வும் அன்ன ஆகாரம் வழங்கும் நிகழ்வும் வெள்ளியன்று நடைபெற்றது

மிகவும் பின்தங்கிய பகுதியான பாட்டாளிபுரம், மற்றும் சின்னகுளம் சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருள்மிகு பத்திரகாளி அம்பாளுக்கு விஷேச பூசை களும் அதன்பின்னர் அன்னஆகாரம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

இதற்கான அனுசரணையை சிவனருள் பவுண்டேசன் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.



# கத்தார் கிண்ணம் IKCQ அல் ஹிதாயா வசம்

(ந.குகதர்சன்)

கத்தாரிலுள்ள கல்குடா சகோதரர்களிடையே நல்லுறவு, சகோதரத்துவத்தை வளர்க்கும் நோக்கிலும் கத்தாரின் தேசிய விளையாட்டு தினத்தை கௌரவிக்குமுகமாகவும் கத்தார் - கல்குடா சமூக நிறுவனத்தின் (Institution Of Kalkudah Community&Qatar (IKCQ)) ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணி IKCQ கிண்ணத்தை வென்று சம்பினானது.

19.02.2021, 26.02.2021 ஆகிய இரு தினங்களிலும் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டிகளிலும் இறுதிப்போட்டியிலும் சிறப்பாக விளையாடிய பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணியினர் குறித்த வெற்றியை தனதாக்கிக் கொண்டுள்ளனர்.

இறுதிப்போட்டியில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணியினரை எதிர்கொண்ட மீராவோடை அல் ஹிதாயா பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணியினர் 6 ஓவர்களுக்கு 83 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 5 ஓவர் நிறைவல் 87 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை பதிவு செய்து கொண்டனர்.

இச்சுற்றுப்போட்டியில் கல்குடாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி கத்தாரில் இயங்கும் வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணி, ஓட்டமாவடி தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணி, மீராவோடை அல் ஹிதாயா பழைய மாணவர் சங்க கத்தார் கிளை அணி, கத்தார் -கல்குடா நலன்புரி அமைப்பின் அணி, கத்தார் - கோறளைப்பற்று மத்தி அபிவிருத்திச்சங்க அணி என ஆகிய ஐந்து அணிகள் பங்கு பற்றியிருந்தன.

# மண்முனைப்பற்றில் நடைபெற்ற கதாபிரசங்க போட்டி நிகழ்வு





(ரக்ஸனா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு நடாத்திய கதாபிரசங்க போட்டியை நடாத்தியிருந்தது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்கள் வழங்கும் நிகழ்வு மண்முனைப் பற்று பிரதேசசெயலக கலாசார பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை(26) நடைபெற்றது.

அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மத்தியில் கலைகலாசார விழுமியங்களை மேம்படுத்தும் நோக்குடனும் ஆன்மீக ரீதியான ஆர்வத்தை கலைத்துறையூடாக வெளிப்படுத்தும் தீர்க்க தரிசனப்பார்வையுடனும் கதாப்பிரசங்க போட்டிகள் நடாத்தப்பட்டன.

இப்பரிசழிப்பு நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், கலாவார பரிவினர், அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருது வைத்தியசாலை விவகாரம்

## – அதாஉல்லா எம்.பியை சந்தித்த வைத்தியசாலை அபிவிருத்தி குழு !



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினருக்கும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவு க்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல்.எம். அஜ்வத் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் வைத்தியசாலையின் குறை,நிறைகள் தேவைகள் வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்களுக்கு நடைபெறும் அநீதிகள் தொடர்பில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் எம்.ஐ.சதாத் விளக்கமளித்தார். இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுத்து பிராந்திய மக்களின் தேவைகளை நிபர்த்தி செய்யும் வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலையை மாற்றியமைக்க உறுதியளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தனது உரையில் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ..எம். அஸீஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் உதவிப்பணிப்பாளர் வைத்தியர் றஜாப், சிரேஷ்ட வைத்திய அதிகாரி சனூஸ் காரியப்பர், தேசிய காங்கிரஸ் பிரமுகர்கள், சாய்ந்தமருது வைத்தியசாலை அபிவிருத்தி குழு முக்கியஸ்தர்கள், ஊர்நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இ.தெ.பல்கலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரபீக்கா அமீர்தீன் புவியியற்துறையில் கலாநிதி பட்டம் பெற்றார்



இலங்கையின் தென் மாகாணத்தின் காலி மாநகரில் அமைந்துள்ள "கட்டுகொடை" எனும் சிறிய கிராமத்தில் 1964.08.04 இல் மொஹமட் சபீக் மற்றும் றெலினா உம்மா ஆகியோருக்கு மூத்த புதல்வியாக பிறந்த ஸித்தி ரபீக்கா அமிர்தீன் காலிஃஉஸ்வதுன் ஹஸனா மகளிர் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதரண தரம் வரை கல்வி கற்று பின், காலிஃமல்ஹருஸல்ஹியா தேசிய பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கலைப் பிரிவில் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருந்தார்.

1984ல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய இவர், 1991ல் டீயு சிறப்புப் பட்டத்தினை புவியியல் துறையில் சிறப்புத் தேர்ச்சியுடன் பெற்றுக் கொண்டதோடு, 1991ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையளராக கடமையாற்றியதுடன், 2003ல் அதே பல்கலைக்கழகத்தில் ஆயு முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் 1994ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியதுடன் 1996ல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமனம் பெற்று இதுவரை சிரேஷ்ட விரிவுரையாளராக (தரம்-I) கடமையாற்றி வருகிறார்.

2019ல் தனது கலாநிதிப் பட்டத்தினை யாழ்பாணப் பல்கலைக்கழத்தில் புவியியற் துறையில் முடித்துக்கொண்ட இவர், இம்மாதம் 24 மற்றும் 25ம் திகதிகளில் நடைபெற்று முடிந்த யாழ் பல்கலைக்கழக த்தின் 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

பெண்கள் பல்கலைக்கழக கல்வியோடு கற்றல் செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்து உயர் கல்வியை கற்பதன் மூலம் தான் சிறந்ததொரு சமுதாயத்தை உறுவாக்க முடியும் என பெண்களுக்கு முன்னுதாரணமாக காண்போம்.

# சிறப்பான விமர்சனத்துடன் நடைபெற்ற 2 கவிதை நூல்களின் அறிமுகமும் நூல் வெளியீடு!



(பி.எம்.எம்.ஏ.காதர், றாசிக் நபாயிஸ்)

மருதமுனை எம்.எம்.நௌபல் எழுதிய "ஆண் மழை பெய்யும் காலமும் பெண் வெயில் நடனமும்" "மன மைதுனம்" கவிதை நூல்கள் அறிமுகமும் நூல் வெளியீடும் நேற்று (27) காலை 10.00 மணிக்கு மருதமுனை கலாசார மண்டபத்தில் மர்/ஹம் கவிதாயினி கலைமகள் ஹிதாயா அரங்கில்

ஜனநாயகத்திற்கும், நல்லாட்சிக்கும், நல்லிணக்கத்திற்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்றது.

இலக்கிய அதிதிகளாக கவிஞர் எழுத்தாளர் ஏ.பீர்முகம்மது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளரும் பிறை எப்.எம். கட்டுப்பாட்டாளருமான பசீர் அப்துல் கையூம் கலந்து கொண்ட இந்நிகழ்வின் இரண்டு நூல்களின் அறிமுகவுரையை கவிஞர் அம்ரிதா ஏயெம் நிகழ்த்த "மன மைதுனம்" நூலின் விமர்சனவுரையை கவிஞரும், விமர்சகருமாகிய சிராஜ் மஸ்/ஹர் நிகழ்த்தினார்.

"ஆண் மழை பெய்யும் காலமும் பெண் வெயில் நடனமும்" எனும் நூலின் விமர்சனவுரையை ஆசிரியரும் கவிஞருமாகிய கவிதாயினி பாத்திமா சூபா நிகழ்த்தினார்.

பிரமிளின் தேர்ந்தெடுத்த கவிதைத் தொகுதியுடன் ஒப்பிட்டு "மன மைதுனம்" நூல் பற்றி கவிஞர் சாஜித் ஒப்பிட்டாய்வு செய்து பேசவுள்ளார், அது போன்று நூலாசிரியரின் " பேரண்டக் கனவு" பிரதியுடன் "ஆண் மழை பெய்யும் காலமும் பெண் வெயில் நடனமும்" எனும் நூலை கவிஞர் குர்சித் ஒப்பிட்டாய்வு செய்தார்.

# சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார்




(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண பாரம்பரிய வைத்தியர்களின் சம்மேளன பொதுச் செயலாளர் வைத்தியர் ஏ.சி.டில்சாத் அவர்களின் அழைப்பை ஏற்று சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின்போது சம்மாந்துறையில் அமைந்துள்ள டில்சாத் ஆயுர்வேத மருந்து தயாரிப்பு நிலையத்தை திறந்து வைத்து அங்கு இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டதன் பின்னர் கிழக்கு மாகாண பாரம்பரிய வைத்தியர்களின் சம்மேளன பொதுச் செயலாளர் வைத்தியர் ஏ.சி. டில்சாத்தின் வைத்திய சேவையை பாராட்டி அவருக்கு பொன்னாடை போர்த்தி ஞாபகச் சின்னத்தையும் அமைச்சர் வழங்கி கௌரவித்தார்.

இதேவேளை அமைச்சர் சிசிர ஜெயக்கொடியின் அம்பாறை மாவட்ட விஜயத்துக்கான ஞாபகச் சின்னத்தை கிழக்கு மாகாண பாரம்பரிய வைத்தியர்களின் சம்மேளன பொதுச் செயலாளர் வைத்தியர் ஏ.சி.டில்சாத்தின் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஜனாசா நல்லடக்க விடயத்தை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நியமிக்க வேண்டும்

## – புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா!

(பாறுக் ஷிஹான்)

ஜனாசா நல்லடக்க விடயத்தை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நியமிக்க வேண்டும் எனவும் சுமந்திரன் ஐயா சாணக்கியன் ஞானசார தேரர் கூட ஜனாசா நல்லடக்க பின்னணியில் பாடுபட்டுள்ளதாக அம்பாறை மாவட்டத்தில் சுயேச்சை குழு -2 என்கிற பெயரில் போட்டியிட்ட அரசியல் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் இன்று சமகால அரசியல் நிலைமை தொடர்பில் கருத்தக்களை முன்வைக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில்,

ஜனாசா நல்லடக்கம் தொடர்பாக வெளிவந்துள்ள வர்த்தமானி




சகலரையும் சந்தோசத்தில் ஆழ்த்தியுள்ளமையில் சந்தேகமில்லை.ஆனால் இங்கு பல விதமான சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்துள்ளன. அரசாங்கம் அன்றிலிருந்து இன்று வரை சுகாதார நிபுணத்துவ குழுவின் அனுமதி தான் இறுதி முடிவு என கூறி வந்தது.இந்த சுகாதார நிபுணத்துவ குழு அன்று ஜனாசாக்களை அடக்கம் செய்ய விடாத காரணத்திற்கும் இன்று அனுமதி கொடுத்தமைக்கும் என்ன காரணம்.இந்த நிலைமை இந்த நாட்டில் சர்ச்சையை எழுப்பியுள்ளதுடன் கேள்வியாகவும் உள்ளது.இதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நிறுவி அன்று ஏன் கொடுக்க மறுத்தார்கள் இன்று ஏன் அனுமதி கொடுத்தார்கள் என்பதை ஆராய வேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும். அதை அறியும் வரை நான் சாகவும் மாட்டேன் சும்மாவும் இருக்கவும் மாட்டேன் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் ஒவ்வொரு சமூகத்திலும் வித விதமான மக்கள் உள்ளனர்.தமிழ் சமூகத்தை சேர்ந்த சுமந்திரன் ஐயா சாணக்கியன் ஆகியோர் ஜனாசா விடயத்தில் பாடுபட்டுள்ளனர். அது தவிர சிங்கள சமூகத்தில் ஞானசார தேரர் கூட ஜனாசா நல்லடக்கத்திற்காக அங்கீகாரம் கொடுக்க பாடுபட்டவர்.அவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.இது போன்று அநேகர் அடக்கம் செய்யப்படவேண்டும் என கூறிக்கொண்டு இருந்தனர்.உலக சுகாதார ஸ்தாபனமும் அடக்கம் செய்யவே கூறியது.எனவே இதனை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நிறுவ வேண்டும் .

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது தரமுயர்த்தும் விடயத்தில் அதற்கு பூரணமான அதிகாரம் வழங்க வேண்டும்.இது தவிர சாய்ந்தமருது நகர சபையும் வழங்க வேண்டும்.என்பதில் உறுதியாகவுள்ளேன்.இது தொடர்பில் எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட உயிரை கொடுப்பேன் என கூறியுள்ளேன் என்றார்.